


தனி பிரதி
ரூ.10/-

PORIYIYAL KADHIR




# பொறியியல் கதிர்


| கதிர் 44 | பாரிப்பு 11 | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஜுலை 2013 |
|---|---|---|---|





**பாட்டாளி வீட்டு பிள்ளைகளுக்கு கல்வி கண் திறந்த கர்மவீரர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளில் (ஜுலை 15) தமிழ்நாடு பொறியியல் சங்கம் அவரை போற்றி வணங்குகிறது.**


நூற்றாண்டு விழா சங்கம்

தோற்றம்
1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD

நூற்றாண்டு
2010

பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை – 5.

அரசு ஆணை எண்.Ms.822 நாள்: 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| **மைய மண்டலம்** | | | |
| 13. | திண்டுக்கல் | 06.07.2013 (மு.ப.) | பொறி. ஆ.நடராஜன்<br>நிதிச் செயலாளர்.<br>பொறி. மு. பஞ்சவர்ணம்<br>மைய மண்டல செயலாளர். |
| 14. | தேனி | 05.07.2013 (பி.ப.) | பொறி. ஆ.நடராஜன்<br>நிதிச் செயலாளர்.<br>பொறி. மு. பஞ்சவர்ணம்<br>மைய மண்டல செயலாளர். |
| 15. | மதுரை | 03.08.2013 (மு.ப.) | பொறி. என்.எஸ்.கௌரிசங்கர்<br>மாநிலத் தலைவர்.<br>பொறி. த. முருகேசன்<br>பொதுச் செயலாளர்.<br>பொறி. மு. பஞ்சவர்ணம்<br>மைய மண்டல செயலாளர். |
| 16. | சிவகங்கை | 20.07.2013 (மு.ப.) | பொறி. கே. கமால்தீன்<br>அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர்<br>பொறி. மு. பஞ்சவர்ணம்<br>மைய மண்டல செயலாளர். |
| 17. | இராமநாதபுரம் | 13.07.2013 (பி.ப.) | பொறி. கே. கமால்தீன்<br>அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர்<br>பொறி. மு. பஞ்சவர்ணம்<br>மைய மண்டல செயலாளர். |
| **தெற்கு மண்டலம்** | | | |
| 18. | கன்னியாகுமரி | 13.07.2013 (மு.ப.) | பொறி. என்.எஸ்.கௌரிசங்கர்<br>மாநிலத் தலைவர்.<br>பொறி. த. முருகேசன்<br>பொதுச் செயலாளர்.<br>பொறி. ஆர்.வி.ரவிச்சந்திரன்<br>தெற்கு மண்டல செயலாளர். |
| 19. | திருநெல்வேலி - தூத்துக்குடி | 12.07.2013 (பி.ப.) | பொறி. என்.எஸ்.கௌரிசங்கர்<br>மாநிலத் தலைவர்.<br>பொறி. த. முருகேசன்<br>பொதுச் செயலாளர்.<br>பொறி. ஆர்.வி.ரவிச்சந்திரன்<br>தெற்கு மண்டல செயலாளர். |
| 20. | விருதுநகர் | 28.06.2013 (பி.ப.) | பொறி. கே. கமால்தீன்<br>அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர்<br>பொறி. ஆர்.வி.ரவிச்சந்திரன்<br>தெற்கு மண்டல செயலாளர். |

# தமிழ்நாடு பொறியியல் சங்கம் (பொ.ப.து.)

சேப்பாக்கம் சென்னை - 600 005.

(08.06.2013 அன்று நடைபெற்ற மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்ட தீர்மானம் எண்.1ன்படி)

## 2013-2014 ஆம் ஆண்டு கிளைப் பொறுப்பாளர் தேர்வு கிளைப் பொதுக்குழு கூட்டம் அறிவிப்பு

| வரிசை எண் | கிளையின் பெயர் | கூட்ட நாள் | கலந்துகொள்ளும் மையச் சங்க பொறுப்பாளர்கள் |
|---|---|---|---|
| 1. | சென்னை | 29.06.2013 (மு.ப.) | பொறி. என்.எஸ்.கௌரிசங்கர் மாநிலத் தலைவர்.<br>பொறி. த. முருகேசன் பொதுச் செயலாளர்.<br>பொறி. எஸ். கண்ணன் வெளியீட்டுச் செயலாளர். |
| **வடக்கு மண்டலம்** | | | |
| 2. | வேலூர் | 28.07.2013 (மு.ப.) | பொறி. என்.எஸ்.கௌரிசங்கர் மாநிலத் தலைவர்.<br>பொறி. த. முருகேசன் பொதுச் செயலாளர்.<br>பொறி. எஸ். கண்ணன் வெளியீட்டுச் செயலாளர்.<br>பொறி. பா.குணதரன் வடக்கு மண்டல செயலாளர் |
| 3. | காஞ்சிபுரம் | 27.07.2013 (மு.ப.) | பொறி. எஸ். கண்ணன் வெளியீட்டுச் செயலாளர்.<br>பொறி. பா.குணதரன் வடக்கு மண்டல செயலாளர் |
| 4. | கடலூர் | 06.07.2013 (மு.ப.) | பொறி. எஸ். கண்ணன் வெளியீட்டுச் செயலாளர்.<br>பொறி. பா.குணதரன் வடக்கு மண்டல செயலாளர் |
| **கிழக்கு மண்டலம்** | | | |
| 5. | திருச்சி | 27.07.2013 (பி.ப.) | பொறி. என்.எஸ்.கௌரிசங்கர் மாநிலத் தலைவர்.<br>பொறி. த. முருகேசன் பொதுச் செயலாளர்.<br>பொறி. ஆர்.வேதமூர்த்தி கிழக்கு மண்டல செயலாளர் |

பொதுச் செயலாளர் மடல்

மடல் – 11(2012-2013)

## தொடரும்

## நம் பயணம்......



### அன்பார்ந்த பொறியாளர் சகோதரர்களே! வணக்கம்!

உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு காலிப் பணியிட மதிப்பீடு 101+82 எண்ணிக்கைக்கு முதன்மை தலைமைப் பொறியாளரால் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. 82 எண்ணிக்கை 2013-14 ஆம் ஆண்டிற்கான காலிப் பணியிட மதிப்பீடு ஆகும். இது அரசின் பரிசீலணையில் உள்ளது.

விதிகளின்படி தமிழ்நாடு பொறியியல் பணித் தொகுதியில் (Tamil Nadu Engineering Service) தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) வரம்பு எல்லைக்குள் (Purview) வரக்கூடிய உதவிச் செயற்பொறியாளர் பதவிக்கு (சிவில், மின்னியல்) காலி பணியிட மதிப்பீடு காலம் சென்ற வருடம் செப்டம்பர் 11-ந் தேதி முதல் இந்த ஆண்டு செப்டம்பர் 10-ந் தேதி வரை என்று கணக்கிடப்படுகிறது. அப்படி பார்த்தால் இப்போது அனுப்பியுள்ள காலிப்பணியிட மதிப்பீட்டை வருகிற செப்டம்பர் மாதத்தில் அல்லது இரண்டு மாதங்கள் முன்னதாக அதாவது ஜீலை மாதம் பரிசீலனை செய்யலாம்.

அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990ன் படி தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி பெற்றவர்களை பணிவரன்முறை செய்யக்கூடாது, உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு கொடுக்கக்கூடாது என்று மாற்றுச் சங்கத்தை சார்ந்த சுமார் 500 உதவிப் பொறியாளர்கள் அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார்கள். ஏற்கனவே 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டு மாற்றுச் சங்க நண்பர்கள் மேற்கண்ட உதவிப் பொறியாளர்களை பணி இறக்கம் (Depromotion) செய்து மீண்டும் தொழில் நுட்ப உதவியாளர்களாக பணி அமர்த்த வேண்டும் என்று வழக்குகள் தொடுத்து அந்த வழக்குகள் கடந்த 16.04.2013 அன்று இறுதி விசாரணைக்கு வந்து தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதற்காக கடந்த 08.06.2013 அன்று தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்றவர்களை அழைத்து ஒரு கூட்டம் நடத்தி இந்த பிரச்சினைகளைப் பற்றி விவாதித்து சில முடிவுகள் எடுத்துள்ளோம். வழக்கின் தீர்ப்பு வந்தவுடன் 10, 11.08.2013 ஆகிய தேதிகளில் திருச்சியில் நடைபெறும் மாநிலப் பொதுக்குழுவில் இந்த பொருள் குறித்து விரிவாக விவாதித்து முடிவுகள் எடுக்கப்படும்.

சங்க தேர்தல் அறிவித்துள்ளோம். உறுப்பினர்கள் தேர்தல்களில் பெருவாரியாக கலந்துக் கொண்டு சிறப்பான பொறுப்பாளர்களை தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இளநிலைப் பொறியாளர்களின் பணிவரன்முறை சம்பந்தமான பணிகள் நடைபெற்று வருகிறது.

இளநிலைப் பொறியாளர் / தொழில் நுட்ப உதவியாளர்களாக பணிபுரிந்து பணி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் மறுபணி அமர்வு பெற்றவர்களுக்கான பணி இடைக்காலம் பொறுத்தல் கோப்பு (Break in Condonation) முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் அரசின் குறிப்புரைகள் (Remarks) சரி செய்யப்பட்டு விரைவில் அரசுக்கு அனுப்பப்பட உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்**

பொதுச்செயலாளர்

---

**த. முருகேசன்,** பொதுச் செயலாளர்
செல்பேசி எண் 9444 999 588, 9281 309 688
E.mail: d.murugavelsivan@gmail.com

---

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் மதுரை கிளையின் உறுப்பினர் பொறியாளர் K.பரமசிவம் உதவிச் செயற்பொறியாளர் அவர்கள் பதவி உயர்வுக்காக ரூ.1,000 (ரூபாய் ஆயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

***நாம் பிறருக்கு கொடுக்கக் கூடிய செலவற்ற சிறந்த செல்வம் முன்மாதிரி***

## மூத்தப் பொறியாளர்களுக்காக உதயமாகிறது புதிய இயக்கம்

TNEA மற்றும் DECT-க்கு ஆதரவாக செயல்பட ஆரம்பிக்கப்பட்டது FORDET. ஆனால் அதில் உள்ள சில சுயநலவாதிகள் TNEA மற்றும் DECT-க்கு எதிராக செயல்படும் அவலம்.

TNEA, DECT ஆகியவற்றிற்கு எதிராக செயல்பட்டதற்காக நான்கு மூத்தப் பொறியாளர்கள் மீது TNEA நடவடிக்கை எடுத்தது. DECT-க்கு எதிராக செயல்பட்டதற்காக மேற்கண்ட நால்வரில் இருவர் மீது DECT நடவடிக்கை எடுத்தது. DECT-ல் உள்ள எல்லா துறைகளை சார்ந்த இணைப்புச் சங்கங்களும் இநத இருவருக்கு எதிராக உள்ளது. (நடவடிக்கைக்குள்ளான நால்வர் FORDET-ல் பொறுப்பாளர்களாக உள்ளார்கள்).

FORDET தானாக TNEA கட்டிடத்தில் இருந்து வெளியேறி சென்றுவிட்டது மட்டுமல்லாமல் TNEA நூற்றாண்டு விழாவிற்காக TNEA மூத்தப் பொறியாளர்களிடம் கடந்த 3 ஆண்டுகளாக வசூல் செய்த பணத்தை அபகரிக்க நயவஞ்சக திட்டம் தீட்டியுள்ளது. மேலும் DECT-விருந்து FORDET விலகுவதாக அறிவித்துள்ளது. FORDET சில சுய நலவாதிகளின் கையில் சிக்கி தரம் தாழ்ந்து போய்க் கொண்டிருக்கிறது.

TNEA-வின் தூண்களாக இருந்த மூத்தப் பொறியாளர்கள் மீது, TNEA-விற்காக உண்மையாக உழைத்த தலைவர்கள் மீது தனிப்பட்ட அராஜக தாக்குதல் நடக்கிறது.

எனவே TNEA, DECT ஆகியவற்றிற்கு ஆதரவாக செயல்பட நல்லெண்ணம் கொண்ட TNEA மூத்தப் பொறியாளர்கள் மற்றும் TNEA மீது அபிமானம் கொண்ட பிற துறைகளை சார்ந்த மூத்தப் பொறியாளர்களால் புதிய இயக்கம் ஆரம்பமாக உள்ளது.

TNEA மீது பற்றுள்ளவர்கள் ஒன்றுபட கேட்டுக் கொள்கிறோம்.

இவண்

1. **பொறி. ஆர்.வெங்கடசுப்பு,** முன்னாள் மாநிலத் தலைவர், TNEA, DECT, FORDET.
2. **பொறி. சி.ப.சண்முகம்,** முன்னாள் மாநிலத் தலைவர்/பொதுச்செயலாளர், TNEA, DECT, FORDET.
3. **பொறி. டி.பி.பாலசுப்பிரமணியன்,** முன்னாள் பொதுச் செயலாளர்/வெளியீட்டுச் செயலாளர், TNEA.
4. **பொறி. எம்.ஊர்க்காவலன்,** முன்னாள் மாநிலத் தலைவர், TNEA, மாநிலத் தலைவர், DECT.
5. **பொறி. என்.வெங்கட்ராமன்,** முன்னாள் பொதுச் செயலாளர்/செயலாளர்-சட்டம், TNEA.
6. **பொறி. ஜி.பாலசுப்பிரமணியம்,** முன்னாள் பொதுச் செயலாளர், TNEA.
7. **பொறி. என்.கிருஷ்ணமூர்த்தி,** முன்னாள் வெளியீட்டுச் செயலாளர், TNEA.
8. **பொறி. என்.கணேஷ்பிரகாஷ்,** முன்னாள் மாநிலத் தலைவர்/பொதுச்செயலாளர், TNEA.
9. **பொறி. டி.வீரராஜ்,** முன்னாள் மண்டலச் செயலாளர், TNEA.
10. **பொறி. ஆர்.ஞானபண்டிதன்,** கொள்கைப் பரப்புச் செயலாளர், DECT.

## சதிச் செயல்களைப் புரிந்து கொண்ட “DECT” அமைப்பும் TNEA (PWD) அமைப்பும்

நல்ல வேளை இவர்கள் சதிச் செயல்களைப் புரிந்து கொண்ட “DECT” அமைப்பும் TNEA (PWD) அமைப்பும் சரியான நேரத்தில் சரியான நடவடிக்கை எடுத்துள்ளனர். TNEA (PWD) பொதுச் செயலாளர் இளைஞர் த.முருகேசன் மையச் சங்க பொறுப்பாளர்களுடன் விவாதித்து தெளிவுடனும் துணிச்சலுடனும் நடவடிக்கை எடுத்துள்ளார். எங்களைப் பொறுத்தவரை அவரது நடவடிக்கை 100 விழுக்காடு சரியானதே. அவருக்கு ஆதரவு தர வேண்டியது நமது கடமை. இளைஞர்கள் நம் போன்ற வயதானவர்களை விட தெளிவாகச் சிந்திக்கிறார்கள். அதிக விழிப்புணர்ச்சி பெற்றிருக்கிறார்கள். திறமையாகச் செயல்படுகிறார்கள். அவர்கள் போக்கில் அவர்களைச் செயல்படச் செய்வதுதான் நம் போன்ற முதியவர்களின் கடமையாக இருக்க வேண்டும். பொய் சொல்வாக்கால் அவர்களுக்கு பெரிய செல்வாக்கு இருப்பதாகக் கருதிக் கொண்டு அந்த இளைஞர்களை தவறாக வழி நடத்த சிலர் முயலுகிறார்களாம். இதுபோன்ற முயற்சிகளை அவர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் அவமானம் தான் மிஞ்சும்.

ஒரு காலத்தில் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தில் சிங்கம் போல் திகழ்ந்தவர்களில் சிலர் இவர்களோடு சேர்ந்து அவமானப்பட்டு நிற்பது வேதனையானதுதான். சேராத இடந்தன்னில் சேர்ந்தார்கள். இணங்கி செயல்பட்டார்கள். விளைவுகளைச் சந்திக்கிறார்கள். என் செய்வது.

**"சேரிடம் அறிந்து சேர்"**

பொதுப்பணித்துறை பட்டாளப் (Military) பொறியாளர்களால் தோற்றுவிக்கப் பெற்றது. எனவே தான் **தமிழ்நாடு பொறியியல் சங்கம் கண்ணியம் - கட்டுப்பாடு கருதி பட்டாள மிடுக்கோடு சரியான நடவடிக்கை எடுத்துள்ளது.** போற்றிப் புகழ வேண்டாம். தூற்றாமல் இருக்கலாமே.

## மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் கூறியது இன்று உண்மையாகியுள்ளன

09.05.2010 அன்று நடைபெற்ற “FORDET” பொதுக்குழுக் கூட்டத்தில் அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களுக்கும் நான் நேரில் வழங்கிய கடிதத்திலிருந்து

1. கரையான் புற்றில் புகுந்த கருநாகம் போல் இந்த சுயநல வாதிகள், .............., பொய் சொல்பவர்கள் வளர்ந்த இயக்கங்களில் புகுந்து அவற்றை அழித்துவிடுவார்கள்.
2. "நூற்றாண்டு விழாவை அமைதியாகக் கொண்டாடவிடாமல் குழப்பம் விளைவிப்பார்கள்”.
3. நூற்றாண்டு விழாவுக்கான நிதி உள்நோக்கத்துடன் வசூலிக்கப்படுகிறது.

**நடப்பில் அவைகள் தானே இன்று உண்மைகளாகி உலா வருகின்றன.**

**பொறியாளர் ஆர்.வெங்கடசுப்பு,**
**முன்னாள் மாநிலத் தலைவர், TNEA, DECT, FORDET.**

## தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மீது பற்று கொண்ட நல்லவர்களே

பகுதி நேர பொறியியல் கல்வி படித்ததனால் செயற்பொறியாளர் வரை பதவி உயர்வு பெற்றனர். சிலர் கண்காணிப்புப் பொறியாளர் வரை பதவி உயர்வு பெற்று ஓய்வு பெற்றனர். இவை எல்லாம் எனக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் போட்ட பிச்சை. நானும் எங்கள் குடும்பமும் உயிருள்ளவரை தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு நன்றிக் கடன் பட்டிருக்கின்றோம். இவை எல்லாம் சொன்னது அன்று.

ஆனால் இன்றோ ஓய்வுக்கு பின்னால் பெருமன்றத்தில் இணைத்துக் கொண்டோர் மூத்தப் பொறியாளர்களை கொச்சைப்படுத்தி இழித்து பேசுவோரை கண்டு வேதனை அடைகிறேன். ஒரு சிலரின் சுயநலத்திற்காகவும், தங்கள் வெத்து கௌரவித்திற்காகவும் தமிழ்நாடு பொறியியல் சங்க இளைஞர்கள் தங்கள் சொல்படி செயல்படவில்லை என்பதற்காகவும், தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு துரோகம் செய்கிறார்கள். தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு துரோகம் செய்வது தாயை பழிப்பதை விட இழிவானது. தங்களை பெரும்புள்ளிகளாக நினைத்துக் கொண்டிருக்கும் இவர்கள் தமிழ்நாடு பொறியியல் சங்க வரலாற்றில் கரும்புள்ளிகள் என்று விரைவில் வெளிச்சத்துக்கு வரும். தமிழ்நாடு பொறியியல் சங்க பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் நேர்மையும், துணிச்சலும் கொண்ட ஒரு சிறப்பான இளைஞர். அவர் தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம். அவர் மையச் சங்க பொறுப்பாளர்களுடன் இணைந்து மிக சரியான முடிவை எடுத்திருக்கிறார். தமிழ்நாடு பொறியியல் சங்கத்தை மறந்தோர் மிருகத்திற்கு சமமானவர்களே.

**பொறியாளர் சி.ப.சண்முகம்,**
**முன்னாள் மாநிலத் தலைவர்/பொதுச் செயலாளர்,**
**TNEA, DECT, FORDET.**

## MEMBERSHIP NUMBERS FOR THE NEW MEMBERS

| M.No | Name | Designation | Date of Birth | Branch |
|---|---|---|---|---|
| 4291 | T.R. Vaiyali | J.E | 16.04.56 | Salem |
| 4292 | P. Dhanasekaran | A.E | 14.06.63 | Salem |
| 4293 | C. Ashok | T.A | 26.07.69 | Chennai |
| 4294 | R.R. Ganesh | A.E | 27.04.60 | Sivagangai |
| 4295 | N. Subbiah | A.E | 13.09.56 | Sivagangai |
| 4296 | P. Anbumozhi | W.I | 25.12.77 | Thiruvarur |
| 4297 | M. Murthi | W.I | 14.06.66 | Dindigul |

The Members who were not allotted membership numbers, please contact your branch office bearers with your date of birth.

**Er. K. Kamaldeen,**
Secretary (Organisation & Legal)

## சாயம் வெளுத்தது

TNEA, DECT ஆகியவற்றிற்கு எதிராக செயல்பட்டதால் நான்கு மூத்தப் பொறியாளர்கள் மீது TNEA நடவடிக்கை எடுத்ததால் TNEA நூற்றாண்டு விழாவிற்காக TNEA மூத்தப் பொறியாளர்களிடம் வசூல் செய்த பணத்தை TNEA நூற்றாண்டு விழாவிற்கு தரக்கூடாது என்று இதற்கு முன்பு மறைமுகமாக சொல்லி வந்த திரு.டி.வி.கோமதிநாயகம் வெளிப்படையாக 16.06.2013 அன்று நடந்த பொதுக்குழுவில் சொன்னதாக தகவல். இப்படி செய்தால் சட்ட சிக்கல் வரும் என்று ஒருவர் சுட்டிக்காட்டியதால் இந்த பணத்தை TNEA-விற்கு தராமல் இருக்க வேறு வகையான நயவஞ்சக திட்டம் தீட்டியிருக்கிறார்கள்.

DECT-க்கு எதிராக செயல்பட்டதால் திரு.டி.வி.கோமதிநாயகம், திரு.கே.வி.வெங்கடேசன் ஆகியோர் மீது DECT நடவடிக்கை எடுத்துள்ளது. DECT-ல் உள்ள அனைத்து துறைகளும் இந்த இருவரை எதிர்க்கிறது. அதனால் DECT-ல் இருந்து FORDET விலகிக் கொள்வதாக கடிதம் கொடுத்திருக்கிறார்கள்.

இதிலிருந்து இவர்கள் TNEA, DECT ஆகியவற்றிற்கு எதிரானவர்கள் என்பது வெட்ட வெளிச்சமாகி உள்ளது. TNEA மூத்தப் பொறியாளர்கள் மீது வெளிப்படையான தாக்குதல். 43 ஆண்டுகளுக்கு முன்பு 1970 ஆம் ஆண்டு TNEA பொதுச் செயலாளராக இருந்து அமரர் திரு.எஸ்.முருகன் அவர்கள் மீது வெளிப்படையான தாக்குதல். இறந்து போன TNEA மூத்தப் பொறியாளர்களைக் கூட அவமானப்படுத்துகிறார்கள். கொச்சைப்படுத்துகிறார்கள். இதை பெருமன்ற செய்தி மடலில் எழுதி வெளியிடுகிறார்கள். நெஞ்சம் பதைக்கிறது. TNEA-வை சேர்ந்த ஈகோயிஸ்டுகள் சிலர் இதைக் கேட்டுக் கொண்டு அங்கே அமர்ந்திருக்கிறார்கள்.

"TNEA-விற்கு கெடுதல் செய்வோம் DECT-க்கு கெடுதல் செய்வோம். முடிந்தால் தமிழ்நாட்டுக்கே கெடுதல் செய்வோம் எங்களை ஒரு பயலும் கேள்வி கேட்கக்கூடாது என்பது போல் செயல்படுகிறார்கள்" என்று ஏப்ரல் 2013 மாத பொறியியல் கதிரில் நான் எழுதியது தற்போது உண்மையாகி உள்ளது.

## பெரியண்ணன் மனோபாவம்

TNEA-வை சேர்ந்த ஒரு சிலர் அங்கே இருப்பதற்கு காரணம் பெரியண்ணன் மனோபாவம் (Big Brother Attitude). சிலருக்கு ஒரு குறிப்பிட்ட வயது ஆகிவிட்டால் தன்னைவிட இளையவர்கள் தாங்கள் என்ன சொன்னாலும் கேட்க வேண்டும் என்கிற எண்ணம் வந்துவிடும். தங்கள் சொல்படி கேட்கவில்லை என்றால் எரிச்சல், கோபம் வரும். இது மனோதத்துவ ரீதியாக நிருபிக்கப்பட்ட குணம். TNEA பொறுப்பாளர்கள் இவர்கள் சொல்படி கேட்கவில்லை என்று இவர்களுக்கு கோபம்.

மேலும் தியாகச் செம்மல் சி.ப.சண்முகம் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது ஒரு சிலருக்கு பிடிக்கவில்லை. இதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும். தியாகம் செய்தவர்களைத்தானே தியாகச் செம்மல் என்று சொல்லமுடியும். முன்னோர்கள் தானே இவருக்கு தியாகச் செம்மல் பட்டம் கொடுத்திருக்கிறார்கள்.

நான்கு பேருக்காக, தங்கள் ஈகோவிற்காக சாதாரணமாக முடியக் கூடிய இந்த பிரச்சினையை பெரிதாக்கிவிட்டார்கள். ஈகோ மனிதர்களை இந்த அளவுக்கு வெறி கொள்ள செய்யும் என்பது இவர்களை பார்த்தப் பிறகுதான் புரிகிறது. TNEA, DECT ஆகியவற்றிற்கு எதிராக செயல்படும் இவர்களை வரலாறு மன்னிக்காது.

**- பொறியாளர் த.முருகேசன், பொதுச் செயலாளர்.**

# 08.06.2013 அன்று சென்னையில் நடைபெற்ற சிறப்பு கூட்டம்

அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990ன் படி தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு பெற்ற உதவிப் பொறியாளர்கள் மற்றும் மையச் சங்க பொறுப்பாளர்கள் சென்னை, சேப்பாக்கம், தமிழ்நாடு பொறியியல் சங்கம் இல்லம் பொறியாளர் சி.ப.சண்முகம் அரங்கில் நடைபெற்றது.

மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் தலைமையில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் ஆரம்பமானது.

மாநிலத் தலைவர் தன்னுடைய உரையில் சங்க கூட்டங்களில் உறுப்பினர்கள் பெருவாரியாக கலந்துக் கொண்டு தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும் என்று கூறினார்.

பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் தன்னுடைய உரையில் அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990ன் படி தொழில் நுட்ப உதவியாளர்கள் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி பெற்றவர்களின் பணிவரன்முறை (Regularisation) மற்றும் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு ஆகியவற்றில் உள்ள பிரச்சனைகள் குறித்து மிக விரிவாக எடுத்துரைத்தார். மேற்கண்ட அரசாணையின் படி வரைவாளர் மற்றும் ஓவர்சீயர் ஆகிய பதவியில் உள்ளவர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவி வழங்கி விட்டு தொழில் நுட்ப உதவியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் வழங்காத நிலையில் 2005 ஆம் ஆண்டு அப்போதைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் மரியாதைக்குரிய ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தையும் மாற்றுச் சங்கத்தையும் அழைத்து பேச்சு வார்த்தை நடத்தியதையும் அதற்கு பிறகு தொழில் நுட்ப உதவியாளர்களுக்கு மேற்கண்ட அரசாணையின் படி உதவிப் பொறியாளர் பதவி வழங்க அரசு ஆணையிட்ட பிறகும் துறைத் தலைமை ஆணையை அமுல்படுத்தாததால் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் சார்பாக நடத்தப்பட்ட போராட்டங்கள், இந்த போராட்டங்களையும் சட்டை செய்யாத துறைத் தலைமை, அதற்கு பிறகு அப்போதைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் மரியாதைக்குரிய துரைமுருகன் அவர்களிடம் முறையிட்டப் பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறைத் தலைமையிடம் மேற்கண்ட ஆணையை அமுல்படுத்த அழுத்தமாக வலியுறுத்திய பிறகே துறைத் தலைமை 76 பேருக்கு மேற்கண்ட அரசாணையின் படி உதவிப் பொறியாளர் பதவி கொடுத்தது, மாற்றுச் சங்கம் தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி பெற்றவர்களை பதவி இறக்கம் (Depromotion) செய்ய வழக்கு தொடுத்தது, நீதி மன்ற தடையாணை பெற்றது, நீதி மன்ற தடையாணையை சங்கம் நீக்கியது, மேற்கண்ட வழக்குகள் கடந்த 16.04.2013 அன்று இறுதி விசாரணைக்கு வந்தது, விசாரணை விவரங்கள், இது சம்பந்தமாக நாம் எடுக்க வேண்டிய அடுத்தக் கட்ட நடவடிக்கைகள், விதித்திருத்தம் உள்ளிட்ட விவரங்களை விரிவாக எடுத்துரைத்தார். தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவிப் பொறியாளர்கள், மேற்கண்ட அரசாணையின் படி உதவிப் பொறியாளர் பதவி பெற்றவர்களை பணிவரன்முறை செய்யக் கூடாது, உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு கொடுக்கக் கூடாது என்று அரசை வலியுறுத்தி சுமார் 500க்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதியுள்ளதை பற்றியும் எடுத்துரைத்தார்.

விதித்திருத்தப் பிரதிநிதி பொறியாளர் என்.கணேசபிரகாஷ் அவர்கள் விதித்திருத்தம் சம்பந்தமாக மிக விரிவாக எடுத்துரைத்தார். விதித்திருத்தம் பெறுவது எவ்வளவு கடினமான வேலை என்பதையும், அதற்கான முயற்சிகள் எவ்வாறு எடுக்கப்பட்டு வருகிறது என்பது பற்றியும் மிக விரிவாக பேசினார்.

தொடர்ந்து மையச் சங்க பொறுப்பாளர்கள் தங்கள் கருத்துகளை பதிவு செய்தார்கள். மேலும் மேற்கண்ட அரசாணையின் படி பதவி உயர்வு பெற்ற உதவிப் பொறியாளர்களுக்கு எதிராக மாற்றுச் சங்க நண்பர்கள் என்னென்ன இடைஞ்சல்கள் ஏற்படுத்தி வருகிறார்கள் என்பதை பற்றி எடுத்துரைத்தார்கள்.

பொறியாளர்கள் கே.என்.ரஞ்சன், ஜி.பழனிச்சாமி, எம்.சென்ராம், சி.கணபதி, ஆர்.தியாகராஜன், டி.வெங்கடேசன், டி.செல்லன், கே.ஆதிமூலம், எம்.பி.தங்கஜெய்லானி, எம்.தாணுமூர்த்தி ஆகியோர் தங்கள் கருத்துக்களை பதிவு செய்தார்கள்.

உறுப்பினர்கள் சந்தேகங்களுக்கு பொதுச் செயலாளர் பதில் அளித்தார்.

தேசிய கீதத்துடன் கூட்டம் நிறைவடைந்தது.

**தீர்மானங்கள்:**

1. அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990க்கு மிக விரைவாக விதித்திருத்தம் வழங்க அரசை வலியுறுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

2. அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990ன் படி தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி பெற்றவர்களின் பணிவரன்முறை (Regularisation) மற்றும் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கு மாற்றுச் சங்கம் தடங்கல்கள் ஏற்படுத்தும் பட்சத்தில் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் சார்பாக கடுமையான போராட்டங்கள் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

3. அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990ன் படி உதவிப் பொறியாளர்கள் பதவி பெற்றவர்களை பணிவரன்முறை செய்வது, உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிப்பது ஆகியவற்றிற்கு எதிராக மாற்றுச் சங்க நண்பர்கள் சுமார் 500க்கும் மேற்பட்ட கடிதங்களை அரசுக்கு அனுப்பி உள்ளார்கள், அதை போலவே 16.04.2013 அன்று இறுதி விசாரணை முடிந்து தீர்ப்பு Reserve செய்யப்பட்டுள்ள வழக்கின் தீர்ப்பை பார்த்து விட்டு தமிழ்நாடு பொறியியல் சங்கத்தை சார்ந்த பொறியாளர்களும் மேற்கண்ட அரசாணைக்கு விதித்திருத்தம் வழங்குவது மற்றும் மேற்கண்ட அரசாணையின் படி உதவிப் பொறியாளர் பதவி பெற்றவர்களை பணிவரன்முறை செய்ய வலியுறுத்தி கடிதம் எழுதுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

4. அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990க்கு எதிராக மாற்றுச் சங்கம் தொடுக்கும் வழக்குகளை எதிர்கொள்ள மேற்கண்ட அரசாணையின்படி தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்றவர்களிடமிருந்து வழக்கு நிதியாக ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வீதம் வசூலிப்பது எனவும், அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990 சம்பந்தமான வழக்குகளுக்கு மட்டும் இந்த நிதியை பயன்படுத்துவது எனவும், இதற்கென்று தனியாக வங்கி கணக்கு பராமரிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

*சேமித்து வாழ பழகி விடு. நீ செல்வந்தன் ஆகிவிடுவாய்*

# 08.06.2013 அன்று சென்னையில் நடைபெற்ற மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம் 08.06.2013 அன்று மாலை 03.30 மணிக்கு சென்னை சேப்பாக்கம் பொறியியல் இல்லம் பொறியாளர் சி.ப.சண்முகம் அரங்கில் மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் தலைமையிலும், பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் தன்னுடைய உரையில் மையச் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசினார். இளநிலைப் பொறியாளர்/உதவிப் பொறியாளர் பணிவரன்முறை, இளநிலைப் பொறியாளர் ஊதிய மாற்றம், அடுத்த உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு, தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலைப் பொறியாளர்களை தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், நூற்றாண்டு விழா உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து பேசினார்.

2013-2014 ஆம் ஆண்டிற்கான சங்க தேர்தல் நடத்துவது குறித்து விவாதிக்கப்பட்டு, கிளைச் சங்க மற்றும் மையச் சங்க தேர்தல் தேதிகள் முடிவு செய்யப்பட்டது.

நூற்றாண்டு விழா குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. மையச் சங்க பொறுப்பாளர்கள், மண்டலச் செயலாளர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தார்கள்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

**முடிவுகள்:**

1. மாநிலப் பொதுக்குழுக் கூட்டம் மற்றும் 2013-2014 ஆம் ஆண்டிற்கான மையச் சங்க தேர்தல் கிழக்கு மண்டலத்தின் சார்பாக திருச்சியில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. மேலும் கிளைச் சங்க தேர்தல் தேதிகள் மற்றும் கலந்து கொள்ளும் மையச் சங்க பொறுப்பாளர்கள் ஆகியவை முடிவு செய்யப்பட்டன.
2. நூற்றாண்டு நிறைவு விழா பொதுக்குழுவிற்கு பிறகு ஆகஸ்ட் மாத இறுதியில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.
3. "இயக்க வரலாறு" மீண்டும் பொறியியல் கதிரில் எழுத மரியாதைக்குரிய மூத்தப் பொறியாளர் ஆர்.வெங்கடசுப்பு அவர்களை கேட்டுக் கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.
4. கோயம்புத்தூரில் தமிழ்நாடு பொறியியல் சங்கம் இல்ல கட்டிட முதல் மாடி கட்டும் பணிக்கு மைய சங்கத்திலிருந்து பொங்கும் நிதி நிதியிலிருந்து ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) கடனாக தருவது என தீர்மானிக்கப்பட்டது.

*ஆபத்தை சந்திக்காத எவனும், தைரியத்திற்கும், வீரத்திற்கும் விளக்கம் கூற முடியாது.*

பெறுதல்

அனைத்து மையச் சங்க பொறுப்பாளர்கள்
மற்றும் கிளைச் சங்க பொறுப்பாளர்கள்

பொறியாளர் சகோதரர்களுக்கு,

பொருள்: சங்க தேர்தல் அட்டவணை அனுப்புதல் - சம்பந்தமாக.

08.06.2013 அன்று சென்னையில் நடைபெற்ற மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டத்தில் சங்க தேர்தல் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. மையச் சங்க தேர்தல் கிழக்கு மண்டலத்தின் சார்பாக 03, 04.08.2013 ஆகிய தேதிகளில் திருச்சியில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது மற்றும் கிளைச் சங்க தேர்தல்கள் கிளைச் சங்க பொறுப்பாளர்கள் மண்டலச் செயலாளர்கள் மூலமாக தெரிவித்த தேதிகளில் நடத்த தீர்மானிக்கப்பட்டது. எனவே மண்டலச் செயலாளர்கள் மற்றும் கிளைச் சங்க பொறுப்பாளர்கள் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் கிளைப் பொதுக்குழுக் கூட்டம் மற்றும் சங்க தேர்தல் நடத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(து. முருகேசன்)
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

இணைப்பு: அட்டவணை

---

பெறுதல்

அரசுச் செயலாளர்,
பொதுப்பணித்துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

முதன்மைச் செயலாளர்,
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத்துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

முதன்மைச் செயலாளர்,
சட்டத்துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

ஐயா,

பொருள்: பொதுப்பணித்துறை - இளநிலைப் பொறியாளர்கள் பணிவரன்முறை (Regularisation) - சம்பந்தமாக.
பார்வை: தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் பல்வேறு கடிதங்கள்.

பொதுப்பணித்துறையில் சுமார் 300க்கும் மேற்பட்ட ஊட்டுப் பதவியிலிருந்து பதவி உயர்வு பெற்ற இளநிலைப் பொறியாளர்கள் பணிவரன்முறை செய்யப்படாமல் உள்ளார்கள். இவர்களில் பகுதி நேர பட்டப்படிப்பு படித்தவர்கள் பணிவரன்முறை செய்யப்படாததால் உதவிப் பொறியாளர்களாக பதவி பெயர் மாற்றம் செய்யப்படாமல் உள்ளார்கள். இதனால் அடுத்த கட்ட பதவி உயர்வு பெறும் நிலையில் உள்ளவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

நேரடி நியமன தடைச் சட்டம் அமுலில் இருந்தபோது உதவிப் பொறியாளர்களுக்கான மூன்று விகிதாச்சாரம் ஒதுக்கி (Reserve) வைத்துவிட்டு இளநிலைப் பொறியாளர்களுக்கான ஒன்று விகிதாச்சாரம் ஊட்டுப் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட்டது. இதை எதிர்த்து பொறியாளர் சங்கம் விகிதாச்சார மீறல் என்று காரணம் காட்டி கீழ்கண்ட இரண்டு வழக்குகளை தொடுத்தது.

1. OA No.1552/2003 (WP.No.17351/2007)
2. WP.No.23830/2004 (WPMPs 28882, 28987, 30205/2004)

மேலே இரண்டாவதாக குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு கடந்த 22.04.2013 அன்று நீதியரசர் மாண்புமிகு ஏ.ஆறுமுகசாமி அவர்கள் முன்னிலையில் விசாரணைக்கு வந்து, தற்போது விகிதாச்சார மீறல் இல்லை என்றும் நேரடி நியமன தடைச் சட்டம் நீக்கப்பட்டவுடன் உதவிப் பொறியாளர்களுக்கான விகிதாச்சாரப்படி உதவிப் பொறியாளர் பதவிகள் நிரப்பப்பட்டுவிட்டதால் மேற்கண்ட வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். மேலும் மேற்கண்ட இளநிலைப் பொறியாளர்களை பணிவரன்முறை செய்யவும் ஆணையிட்டுள்ளார்.

மேற்கண்ட இரண்டு வழக்குகளை காரணம் காட்டி சுமார் 300க்கும் மேற்பட்ட இளநிலைப் பொறியாளர்கள் பணிவரன்முறை செய்யப்படாததால் இவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள்.

2004 ஆம் ஆண்டு தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பில் விகிதாச்சார மீறல் இல்லை என்று கூறியிருப்பதால், அதற்கு முன்பே 2003 ஆம் ஆண்டு தொடுக்கப்பட்ட மேலே முதலாவதாக கூறப்பட்ட வழக்கிலும் விகிதாச்சார மீறல் இல்லை என்று தான் பொருள் படும். ஏனெனில் 2003 ஆம் ஆண்டு விகிதாச்சார மீறல் இல்லை என்றால் தான் 2004 ஆம் ஆண்டும் விகிதாச்சார மீறல் இல்லாமல் இருக்கும்.

எனவே மேற்கண்ட 300 இளநிலைப் பொறியாளர்களை உடனடியாக பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

இணைப்பு: நீதிமன்ற தீர்ப்பு நகல்

---

## இரங்கல் செய்தி

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சிவகங்கை கிளையின் உறுப்பினர் பொறியாளர் S.சுகுமார் உதவிப் பொறியாளர் அவர்கள் 01.07.2013 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளையின் உறுப்பினர் பொறியாளர் K.ஆறுமுகம் இளநிலைப் பொறியாளர் (ஓய்வு) அவர்களின் மனைவி திருமதி A.கலாவதி அவர்கள் 06.05.2013 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

***வீரமுள்ளவன், கொண்ட கொள்கையில் நம்பிக்கையும் உள்ளவனாக இருக்கிறான்***

பெறுதல்

முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்),
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), சென்னை மண்டலம்
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து.,
சேப்பாக்கம், சென்னை - 5.

ஐயா,

பொருள்: பணியமைப்பு - த.நா.பொ.ப. தொகுதி / த.நா.பொ.சா.ப. தொகுதி - பட்டப் படிப்பு தேர்ச்சி பெற்றது - திரு.க.ஜெய்சங்கர் இளநிலைப் பொறியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளராக பதவிப் பெயர் மாற்றம் (Redesignation) கோருதல் - சம்பந்தமாக.

பார்வை:
1. முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.அ. மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சென்னை அவர்களின் கடிதம் எண்.எஸ்(2)/ 29148/04-33 நாள் 30.03.2006.
2. கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து. ஏரிகள் நவீனப்படுத்தும் வட்டம், திருச்சி அவர்களின் கடித எண்.நிஉ/1159/2006 நாள் 09.05.2006.
3. தலைமைப் பொறியாளர், வடிவமைப்பு ஆராய்ச்சி & கட்டுமான ஆதாரம் (DRCS) க.எண்.பி.இ.2/6631/05 நாள் 19.12.2005.
4. முதன்மை தலைமைப் பொறியாளர், பொ.ப.து. நீ.ஆ.அ. மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்2(2)/84462/2007-08 நாள் 08.07.2008.
5. அரசுச் செயலாளர், பொதுப்பணித்துறை, சென்னை அவர்களின் கடித எண்.375 நாள் 13.12.2007 (முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.அ. மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சென்னை அவர்களுக்கு முகவரியிட்டது).
6. திரு.க.ஜெய்சங்கர் அவர்களது கடித நாள் 21.01.2009.

பார்வை 1ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் நீ.ஆ.அ. மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சென்னை அவர்களின் கடித எண்.எஸ்(2)/29148/04-33 நாள் 30.03.2006 அவர்களின் கடிதம் தொடர்பாக, உதவிப் பொறியாளர் பதவி உயர்வு வழங்க உரிய வழிமுறையாக திரு.க.ஜெய்சங்கர் அவர்களது விண்ணப்பம் கண்காணிப்புப் பொறியாளர் பொ.ப.து. ஏரிகள் நவீனப்படுத்தும் வட்டம், திருச்சி-20 அவர்கள் மூலம் முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.அ. மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சென்னை-5 அவர்களுக்கு பார்வை 2ல் காணும் கடிதம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

